தேயிலை சக்தி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் மீதான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) இன் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டின் நிதியத்தின் செயற்பாடுகள் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொறு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொறு கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் அறிவிப்புச் செய்யப்படுமாறான கால எல்லைகளினுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை தேவையான நேரத்தினுள் தயாரிக்க நேரிடுவதாக உறுதி செய்ய வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பான ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டும்.

**2. கணக்காய்வு அவதானிப்பு**

**2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை மூலம் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2) ஈ மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள், கணக்காண்டு முடிவடைந்த 02 மாத்ஙகளிற்குள் செயலாற்றுகை அறிக்கையுடன் பொது திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும், 2020 ஆண்டு முதல் 2024 ஆண்டு இறுதி வரையான நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றுகை அறிக்கை ˙ கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

**2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைத்திருக்கும் தன்மை**

நிதியத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்ட 2019 திசெம்பர் 31 திகதிக்கான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரம் பின்வருமாறு.

| உருப்படிகள் | பெறுமதி (ரூபா) |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | 384,704,486 |
| நடைமுறை சொத்துக்கள் | 345,453,906 |

| | |
|---|---|
| **மொத்த சொத்துக்கள்** | **730,158,392** |
| உரிமை மூலதனம் | 201,250,254 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | 273,292,456 |
| நடைமுறை பொறுப்புக்கள் | 255,615,681 |
| **உரிமை மூலதனம் மற்றும் மொத்த பொறுப்புக்கள்** | **730,158,391** |
| மொத்த வருமானம் | 117,439,777 |
| மொத்த செலவுகள் | 52,365,324 |
| **இலாபம்** | **65,074,453** |

**2.3 நிதியத்தின் செயற்பாடுகள்**

தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமாக 12 தொழிற்சாலைகள், மாவரல வத்த மற்றும் ஹொரன பசளை களஞ்சியம் காணப்பட்டதுடன் அவற்றின் முகாமைத்துவம் தனியார் தரப்பினரிற்கு குத்தகை வழங்கப்பட்டிருந்தன. 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை நிதியம் தொடர்ந்து நட்டமடைந்து இருந்ததுடன் நிதியத்தின் உரிமை மூலனமும் படிப்படியாக குறைவடைந்து காணப்பட்டது. அதன் பிரகாரம் 2012 ஆண்டில் ரூபா 124.058 மில்லியனான உரிமை மூலதனம் 2015 ஆண்டில் ரூபா 111.65 மில்லியனான மறை பெறுமானமாக ஆகியிருந்தது. இந்த நிலைமையின் மீது 2016 ஜுலை 13 திகதிய இலக்கம் அப16/1224/726/015-I கொண்ட அமைச்சரவை தீர்மானத்தினால் தேயிலை சக்தி நிதியத்தின் செயற்பாடுகளை பெறுந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயலாளரிற்கு ஒப்படைத்து நிதியத்தை மறுசீரமைக்க அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2023 ஏப்ரல் 18 திகதிய இலக்கம் அப/23/0615/616/014 கொண்ட ‘‘தேயிலை சக்தி நிதியத்தின் பங்குதாரர்கள் இடமிருந்து தேயிலை சக்தி நிதியத்திற்கு பங்குகளை மீள் கொள்வனவு செய்தல்’’ எனும் தலைப்பிலான அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் தேயிலை சக்தி நிதியத்தின் பங்குதாரர்களிற்கு பங்கின் பெயரளவு பெறுமதியான ரூபா 10 தொகையை மீள் செலுத்தி உரிய பங்கு உரிமையை தேயிலை சக்தி நிதியத்திற்கு பொறுப்பேற்க மற்றும் அதற்காக தேயிலை சக்தி நிதியத்தின் வருவாய்களை மாத்திரம் பயன்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2024 ஆண்டிற்காக நிதியத்தின் முன்னேற்றம் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஏப்ரல் 18 திகதிய இலக்கம் அப/23/0615/616/014 கொண்ட ‘‘தேயிலை சக்தி நிதியத்தின் பங்குதாரர்களிடம் இருந்து தேயிலை சக்தி நிதியத்திற்கு பங்குகளை மீள் கொள்வனவு செய்தல்’’ எனும் தலைபிலான அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதிக்கு நிதியத்தினால் மீண்டும் கொள்வனவு செய்த பங்குகளின் பெறுமதி ரூபா 22,615,890 ஆகவிருந்தது. அதன் பிரகாரம் நிதியம் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் கொள்வனவு செய்யாத பங்குகளின் பெறுமதி ரூபா 183,398,260 ஆகுமென அவதானிக்கப்பட்டது. | தேயிலை சக்தி பங்குகளை மீள் கொள்வனவு செய்வது தொடர்பாக அறிவிக்கும் பத்திரிவை அறிவித்தல் பிரசுறிக்கப்பட்டுள்ளதுடன் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தேயிலை பரீட்சிப்பு உத்தியோகத்தர் மூலம் மற்றும் அகில இலங்கை சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்க நிறுவன சங்கங்கள் மூலம் தேயிலை சக்தி பங்கு உரிமையாளர்களை இது தொடர்பாக அறிவுருத்துமாறு அந்த நிறுவனத்திற்கு எழுத்து மூலம் அறிவுருத்தப்பட்டுள்ளது. | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிதியத்தினால் பங்குகளை மீள்கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேயிலை சக்தி நிதியத்தின் தொழிற்சாலைகளை குத்தகை வழங்குவது தொடர்பாக கைச்சாத்திட்டிருந்த உடன்படிக்கை பிரகாரம் குத்தகை வழங்கப்பட்ட மாவரலவத்த, ஹொரண பசளை களஞ்சியம் மற்றும் 12 தொழிற்சாலைகளிலிருந்து 2024 திசெம்பர் 31 திகதி வரை குத்தகை தொகையை செலுத்தாத அளவு ரூபா 137,753,918 ஆகும். | நிலுவை குத்தகை/ முகாமைத்துவ கட்டணம் காணப்பட்ட ரய்கம்கொரளய, கிளிமலே, மாவரல, கிளிமலே, கொத்மலே, வலஹந்துவ, மஹவெலி மற்றும் மாவரல வத்தவை மீண்டும் தேயிலை சக்தி நிதியத்திற்கு சுவீகரித்து காணப்பட்ட நிலுவை தொகை அறிவிட தேவையான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து உரிய தகவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மற்றைய நிலுவை குத்தகை/ முகாமைத்துவ கட்டணம் காணப்படும் தொழிற்சாலைகளில் குத்தகை/ முகாமைத்துவ பற்றாளர்கள் காணப்படும் நிலுவை குத்தகை/ முகாமைத்துவ தொகையை தவணைகளாக செலுத்த இணங்கியுள்ளனர். | நிலுவை முகாமைத்துவ கட்டணத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2024 ஒக்டோபர் 29 திகதிய இலக்கம் அப/24/1984/716/002 கொண்ட அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் நிலுவை குத்தகை அல்லது முாகமைத்துவ கட்டணம் மீது 10 சதவீத வருடாந்த விகிதத்தின் கீழ் மீள் கணிப்பிட்டு தாமதக் கட்டணம் அறிவட நடவடிக்கை எடுக்க வேண்டியதால், 2024 திசெம்பர் 31 திகதி வரை குத்தகை அல்லது முகாதைத்துவ கட்டணம் செலுத்தாததன் மீது தாமதக் கட்டணமாக ரூபா 61,040,440 தொகை அறவிடப்படவுள்ளதாக அவதானிக்கப்பட்டது. | காணப்படும் தாமதக் கட்டணத்தை செலுத்துமாறு ஏனைய செயற்படு நிலையில் உள்ள குத்தகை /முகாமைத்துவ கட்டணங்களின் தரப்பினரிற்கு எழுத்து மூலம் அறிவுருத்தப்பட்டுள்ளது. | அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிட தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2017 ஏப்ரல் 24 திகதி தனியார் தரப்பினரிற்கு மாவரல தோட்ட முகாமைத்துவத்தை 10 ஆண்டு காலத்திற்காக குத்தகை அடிப்படையில் வழங்கி இருந்ததுடன் அந்த குத்தகை பெறுனர் தரப்பினரிடமிருந்து மீண்டும் மீண்டும் 2023 ஆகஸ்ட் 15 திகதி நிதியத்திற்கு மாவரல தோட்டத்தை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருந்ததுடன் | மாவரல காணிக்கு சொந்தமான தளக்கோல பத்திரத்தில் காணப்படும் சில பிரச்சினைகள் மீது வேலியை தீர்த்துக் கொள்ளும் நடவடிக்கையில் சில தாமதம் காணப்பட்ட போதும் தற்போது குறித்த நிலைமையை தீர்த்து நிலஅளவை திணைக்களத்தின் மூலம் காணி எல்லைகளை குறியிட தேவையான நடவடிக்கைகள் | மாவரல தோட்ட காணி நிலஅளவை நடவடிக்கைகை ய மேற்கொண்டு வேலியை தீர்த்து காணித் துண்டுகளை |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டு இறுதி வரை மீண்டும் குத்தகை வழங்கியிருக்கவில்லை. மேற்படி ஆதனத்தின் சுமார் 100 ஏக்கர் எல்லையினுள் எல்லை வேலிகள் சரியாக நில அளவை செய்து காணித் துண்டுகளை ஒதுக்கி வழங்கியிருக்காமை மற்றும் அதன் காரணமாக வெளித்தரப்பினரால் நிலத்தை பயன்படுத்துவது தொடர்பாக 2021 ஆண்டில் வெளியிட்ட தொழிற்சாலை குத்தகை வழங்குதல் தொடர்பான கணக்காய்வு ஐயவினாவில் வெளிப்படுத்தியிருந்த போதும் 2024 ஆண்டு இறுதிவரை எல்லைகளை தீர்த்துக் கொள்ளும் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கவில்லை. | தற்போது தயார் செய்யப்பட்டுள்ளதுடன் இந்த காணிக்காக அனைத்து அனுமதியற்ற நுழைவுகளிற்கு எதிராக மாவரல பொலிஸில் முறைப்பாடு கோவையிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமா காணிக்குரியதாக கொட்டபொல காணி பதிவாளர் அலுவலகத்தில் கேவியட் தடை பெறப்பட்டுள்ளது. | வேறாக்க மற்றும் நிதியத்தினால் ஆக்கபூர்வ பணியில் ஈடுபடுத்த அல்லது புதிய குத்தகை பெறுனரிற்கு வழங்க தாமதமின்றி நடடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | நிதியத்தினால் செயற்படுத்தும் ஹொரன பசளை களஞ்சியம் மற்றும் ரய்கம் கோரளய தொழிற்சாலை அமைந்துள்ள காணிகளின் உரிமையை, தற்போது குறித்த பிரதேச செயலாளரின் கீழும் எல்விடிய, ஹினிதும, மற்றும் பஸ்ஸர ஆகிய தொழிற்சாலைகள் அமைந்துள்ள காணிகளின் உரிமையை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கீழும் காணப்பட்ட போதும் காணிகளின் உரிமையை நிதியத்திற்கு சுவீகரித்துக் கொள்ளாது கட்டிடம் மற்றும் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் எழுத்துமூல அங்கீகாரத்தின் மீது குறித்த தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் காணியை தேயிலை சக்தி நிதியத்திற்கு சுவீகரிக்க தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | தொழிற்சாலை அமைந்துள்ள காணிகளின் உரிமையை நிதியத்திற்கு சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | தேயிலை சக்தி நிதியத்திற்கு எதிராக வெளித் தரப்பினரால் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்ததுடன் தேயிலை சக்தி நிதியத்தினால் மாவட்ட நீதிமன்றத்தில் 07 நிதி அறவீட்டு வழக்குகள் உள்ளடங்களாக 10 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு இருந்தன. | இணங்குகிறேன். | வழக்கு தாக்கல் செய்வதால் செலவிட நேரிடும் செலவினை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | தேயிலை சக்தி காணிகளின் வேலிகளை சரியாக இனங்கண்டு நிலஅளவை செய்யப்படாததுடன் அந்த காணிகள் அனுமதியற்ற குடியிருபாளர்கள் | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதிருக்க தேவையான அடிப்படை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமான ஆதனங்களை |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்துவதில் இருந்து அவற்றை தீர்ப்பதற்கு சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடுவதால் அது நிதியத்திற்கு மேலதிக செலவாக இருந்தது. | | சரியாக கணக்கீடு செய்து தீர்த்துக் கொள்ள தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | பெறுந்தோட்ட மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட TSF/ACC/Audit–2024-Vol iv கொண்ட கடிதம் மூலம், தேயிலை சக்தி நிதியம் எனும் பெயரில் பதிவு செய்த / நிதியத்தின் பெயரில் பதிவு செய்த ஏனைய நிறுவனங்களினால் பராமரித்து ஓட்டத்தில் ஈடுபடுத்தியுள்ள வாகனங்கள் இல்லையென உறுதி செய்திருந்ததுடன் மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடம் பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம் தேயிலை சக்தி நிதியம் எனும் பெயரில் மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் 17 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 17 வாகனங்களின் தற்போதைய உரிமை தொடர்பாக கணக்காய்வின் போது சர்ச்சைக்குரிய தன்மை அவதானிக்கப்பட்டது. | மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மூலம் தகவல்களை பெற்றுக் கொண்டு மற்றும் நிதியத்தில் காணப்படும் தகவல்களின் பிரகாரம் எதிர்காலத்தில் விடயங்களை உறுதி செய்து கொள்ள நடவடிக்கை எடுப்பதாக மேலும் அறிவித்துக் கொள்கிறேன். | நிதியத்திற்கு சொந்தமான பௌதீக ரீதியாக காணப்படாத இந்த வாகனங்கள் பற்றி மோடார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மூலம் தகவல்களை பெற்றுக் கொண்டு அதன் பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்க செயற்பட வேண்டும். |